**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>**

**<u>MCOP.No. 304/2018</u>**

2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22-ம் நாள் வியாழக்கிழமை **எ.ம.சா.2 -**ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளர் திரு. ஆர்.கண்ணதாசன் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பன்னீர்செல்வம் | **வட்டம்** | மதுரை |
| **த.பெ** | வேலுச்சாமி | **சமயம்** | இந்து |
| **கிராமம்** | மதுரை | **வயது** | 47/2024 |

**முதல் விசாரணை:**

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் முதுநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். நான் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். தாவா விபத்தில் சம்பந்தப்பட்ட 1ம் எதிர்மனு தாரருக்கு சொந்தமான டிஎன் 63 எ.எஸ். 5699 என்ற பதிவு எண்ணுள்ள பேருந்திற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வழங்கப்பட்ட காப்பீட்டு பாலிஸி நிபந்தனை நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி நகல் **எ.ம.சா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா விபத்து குறித்து மதகுபட்டி காவல் துறையினர் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விபத்து சம்பந்தமான மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி சான்றிட்ட நகல் **எ.ம.சா.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட கோப்புகள் எனக்கு ஆரம்பத்தில் இருந்து எனக்கு நேரடியாக தெரியும். நான் 15 வருடமாக எதிர்மனுதாரர் இன்சூரன்ஸ் கம்பெனியில் வேலை செய்கிறேன். உங்களால் உங்கள் நிறுவனத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு வழங்கப்பட்ட காப்பீட்டு பாலிசியில் விபத்து சமயத்தில் விதி மீறல் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா விபத்து சம்பந்தமாக எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ள 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் மீது மட்டும் தான் கவனக்குறைவாக ஓட்டி விபத்து ஏற்படுத்தியதாக குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால்

சரியல்ல. ஸ்கார்பியோ ஓட்டுநர் மீது தாவா விபத்து சம்பந்தமாக எந்த புகாரும் குற்றவியல் வழக்கும் இல்லை என்றால் சரிதான். அவர் இறந்துவிட்ட காரணத்தால் குற்றவியல் வழக்கு அவர் மீது தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிரிமனுதாரரோ எங்கள் நிறுவனமோ ஸ்கார்பியோ கார் ஓட்டுநர் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர் இறந்துவிட்ட காரணத்தினால் அவர் மீது எங்களால் புகார் அளிக்க இயலவில்லை. கார் ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லாத காரணத்தால் தான் அவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கோப்புகளின் அடிப்படையில் எனக்கு தெரியும். எ.ம.சா.ஆ.2 ஒரு உத்தேச வரைபடம் என்றால் சரியல்ல. முறையான விசாரணைக்கு பின்னர் காவல் துறையினரால் தயார் செய்யப்படுவது. விபத்து நடந்த சமயத்தில் இறந்து போன கருப்பையா சிங்கப்பூரில் பணிபுரிந்து வந்தார் என்றால் அது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. மனுவில் கூறப்பட்டுள்ளது. விபத்தில் இறந்த கருப்பையா என்பவரின் சிங்கப்பூரில் வந்த வருமானம் சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை மறுப்பதற்கு எங்களிடம் ஆவணம் எதுவும் இருக்கிறதா என்று கேட்டால் அவர் வருமான வரி செலுத்தியதற்கான ஆவணமும் எங்களிடம் இல்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதானல் எங்களுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட பாலிசிக்கு 3ம் நபர் காப்பீடு விபத்து சமயத்தில் நடப்பிலிருந்தது என்று சொன்னால் சரிதான். 1வது எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவன்குறைவால் தாவா விபத்து நடந்தது என்றும் 1வது எதிர்மனுதாரர் எங்களுடைய நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளதால் மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க 2வது மனுதாரர் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**